செய்தி வெளியீடு எண். 238 நாள்: 02.05.2018

## பள்ளிப்பட்டு வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற 1427-ம் பசலி வருவாய் தீர்வாயத்தில் (ஜமாபந்தி) மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்களிடமிருந்து 239 மனுக்களை பெற்றுக்கொண்டு, சம்மந்தப்பட்ட அலுவலர்களை விரைந்து பரிசீலனை செய்து உரிய தீர்வு வழங்க அறிவுறுத்தினார்

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டாட்சியர் அலுவலகத்தில் 1427-ம் பசலி வருவாய் தீர்வாயத்தில் (ஜமாபந்தி) மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்களிடமிருந்து 239 கோரிக்கை மனுக்களை இன்று (02.05.2018) பெற்றுக்கொண்டார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இன்று வெங்கட்ராஜகுப்பம், வெளியகரம், இருதலைவாரிப்பட்டடை, புதுப்பட்டு, தளவாய்ப்பட்டடை, ஈச்சம்பாடி, பெருமாநெல்லூர், குமாரராஜீப்பேட்டை, திருமால்ராஜீப்பேட்டை ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்த பொதுமக்களிடமிருந்து வருவாய்த்துறை சார்பாக பட்டா மாற்றம் தொடர்பாக முழு புலம், உட்பிரிவு, வீட்டுமனைப் பட்டா, பட்டா மேல்முறையீடு, நில எடுப்பு மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டம், குடும்ப அட்டை சான்றிதழ்கள் மற்றும் இதர மனுக்களையும், பிற துறைகளைச் சார்ந்த மனுக்கள் ஆக மொத்தம் 239 மனுக்களை பெற்றுக்கொண்டார். அவற்றில் மனு கொடுத்த இன்றே ஏற்கப்பட்ட 10 மனுக்களில் பட்டா மாற்றம், மாற்றுத்திறனாளிகளுக்கு ஓய்வூதியத்திற்கான ஆணைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் மொத்தம் உள்ள 12 வட்டங்களில் நடைபெற்ற 1427-ம் பசலி வருவாய் தீர்வாயத்தில் (ஜமாபந்தி) மொத்தம் 1788 மனுக்கள் பெறப்பட்டு 66 மனுக்கள் ஏற்கப்பட்டு தீர்வு காணப்பட்டு, 9 மனுக்கள் தகுதியின்மையால் தள்ளுப்படி செய்யப்பட்டு 1713 மனுக்கள் பரிசீலனையில் உள்ளது.

இந்நிகழ்ச்சியில் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.எம்.நரசிம்மன், உதவி இயக்குநர் (நில அளவை) திரு.ராஜகணபதி, மாவட்ட ஆட்சியர் அலுவலக மேலாளர் (பொ) திரு.கணேசன், பள்ளிப்பட்டு வட்டாட்சியர் திருமதி.தமிழ்ச்செல்வி, துறைச்சார்ந்த அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**